செ.வெ: 59 பத்திரிக்கை செய்தி 25.3.2017

# திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரியில் இரத்த தான முகாம்

## மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் இரத்தம் வழங்கி முகாமை துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி வளாகத்தில், தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவர்கள் சங்கம் சார்பில் இரத்ததான முகாம் மற்றும் உடல் உறுப்பு தான் முகாம் இன்று (25.3.2017) மாவட்ட வருவாய்அலுவலர்திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இரத்தான முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் இரத்தம் வழங்கி துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சித்தி அத்திய முனைவரா, துணை முதல்வர் மரு.கண்ணன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.ராம்கணேஷ், அகாடமிக் அலுவலர் மரு.அபுல்காசிம், தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவர்கள் சங்க தலைவர் மரு.சரவணபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மரு.அஷ்ரப்அலி வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்க செயலாளர் மரு.ஜஸ்டின் நன்றியுரையாற்றினார்.

மரு.முகமதுகனி, மாவட்ட விரிவாக்க கல்வி அலுவலர் திரு.அப்துல் காதர் மற்றும் மருத்துவ அலுவலர்கள் தன்னார்வலர்கள், ரத்த கொடையாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.